*அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியதுபோல, எல்லாவற்றிற்குமே, எந்தெந்த இடங்களில் சுற்றுலாத் தலங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்த சுற்றுலாத் தலங்கள் பொதுவாக, வனத் துறை, நீர்வளத் துறை, உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, இந்து சமய அறநிலையத் துறை போன்ற துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தச் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த, தடையின்மைச் சான்று பெற்று, விரிவான திட்ட மதிப்பீடு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையோடு கருத்துரு கிடைக்கப்பெற்றால், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**17—**

## விசைத்தறி கூட்டுறவுச் சங்கம்

***26667—திரு. செ. சுந்தரராஜன்:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, தாரமங்கலத்தில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*2024 பிப்ரவரி 14]*

**மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் ஒன்று சேர்ந்து விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை வழங்கும்பட்சத்தில், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 9(1)-ன்படி புதிய விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை, விதிமுறை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

**திரு. செ. சுந்தரராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் ஆசியோடு, இன்று பொறுப்பேற்றிருக்கும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஆர்.பி. உதயகுமார் அண்ணன் அவர்களுக்கு வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன்.*

*தாரமங்கலம், இடங்கணசாலை, இளம்பிள்ளை போன்ற பகுதிகளெல்லாம் விசைத்தறியை ஆதாரமாகக் கொண்டு ஜவுளித் தொழில் செய்துவரும் பகுதிகளாகும். இந்தப் பகுதிகளிலே சூரத்திலிருந்து சேலைகளைக் கொள்முதல் செய்து கொண்டுவந்து இங்கே வைத்து தரமற்ற சேலைகளை இப்போது விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், அந்தப் பகுதிகளிலே உற்பத்தி செய்யக்கூடிய சேலைகளையெல்லாம் அவர்கள் விற்பனை செய்வதற்கு இயலாமல், ஜவுளித் தொழில் செய்பவர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி இருக்கிறது. எனவே, அரசு முன்வந்து அந்தப் பகுதிகளிலே உற்பத்தி செய்யக்கூடிய சேலைகளை கொள்முதல் செய்து சங்கங்கள் மூலமாக விற்பனை செய்தால், அந்தப் பகுதிகளில் உள்ள கிட்டத்தட்ட 2 இலட்சம் குடும்பங்களுடைய வாழ்வாதாரம் சிறப்பாக இருக்கும். அதை அரசு செய்ய முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

[2024 பிப்ரவரி 14

**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கோரிக்கை, அங்கு ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தர வேண்டுமென்பதாகும். நீங்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தால் automatic ஆக நீங்கள் நினைக்கின்ற மாதிரி, தரமான பொருள் உற்பத்தி செய்யப்படும். அதற்கு நிபந்தனைகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளில் கீழ்க்காணும் தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன: உறுப்பினர்கள், தங்கள் சங்கம் துவக்கவுள்ள அந்த எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டும். இவர்களுக்கு விசைத்தறி இழுக்க தெரிந்திருக்க வேண்டும். இவர்களுக்குச் சொந்தமாக minimum 5–க்கு குறையாமல் விசைத்தறிகள் இருக்க வேண்டும். இவர்கள் 18 வயதிற்குமேல் இருக்க வேண்டும். புதிதாக விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேருபவர்கள், வேறு சங்கத்தில் member ஆக இருக்கக் கூடாது. அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்ற நபர் ஒருவர் முதன்மை அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, சங்கத்தில் பணம் கட்டுவார்கள். அந்த உறுப்பினர் பெயரில் Bank–ல் account வைக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 9(1)–ன்கீழ் திருத்தியுள்ள படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். Application–ஐ பூர்த்தி செய்து, கட்டணம் செலுத்திய Challan–ஐ காட்ட வேண்டும். அனைத்து உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால், AD அவர்கள் கள ஆய்வு செய்த பிறகு அந்தச் சங்கம் புதியதாக பதிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.

**திரு. செ. சுந்தரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கத்தில் உள்ள விதிமுறைகளைப் பற்றி கூறினார்கள். அந்த விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் சங்கத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறோம்.

அதேபோல், தற்போது Auto looms அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. Auto looms அதிகமாகின்ற காரணத்தால்

*2024 பிப்ரவரி 14]*

*விசைத்தறிகள் பாதிக்கப்படுகின்றன. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, எங்கள் ஐயா எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி விசைத்தறி சங்கங்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்பு வழங்கினார்கள். அப்போது 6 மாதத்திற்கு* uniform*-மும், 6 மாதத்திற்கு இலவச வேட்டி சேலையும் வழங்கி வந்த சூழ்நிலை. தற்போது 3 மாதங்களுக்கு மட்டுமே அந்த உற்பத்தி குறியீடு கொடுக்கப்படுகிறது. அதனால், விசைத்தறி மிகவும் நலிவடைந்து கொண்டிருக்கிறது. விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, விசைத்தறிகளைக் காப்பாற்ற வருடம் முழுவதும் உற்பத்திக்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் இப்படி ஒரு துறையே இருக்கிறது என்கிற அளவிற்கு, இன்றைக்கு நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. நியாயமாக நீங்கள் பார்த்தீர்களென்றால், சென்ற வருடம் இதே வேட்டி சேலை திட்டத்தைப் பற்றி நீங்கள் நிறைய கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தீர்கள். பத்திரிகை செய்திகளிலும் செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் வரையில் வழங்கப்பட்டன என்று சொல்லிக்கொண்டிருந்தீர்கள். ஆனால், 20 வருடங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த முறைதான் முதன்முறையாக, மாண்புமிகு உறுப்பினர் கோரும் அளவிலான தரத்தில், டிசம்பர் 30 ஆம் தேதிக்குள் 1 கோடியே 77 இலட்சம் வேட்டி சேலைகள் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டன. இந்தத் துறைக்கு அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் எவ்வாறு முக்கியத்துவம் அளித்தார்களோ, அதேபோன்றும் அதைவிட மேலாகவும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் இத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து, துறை சிறந்த முறையில்*

செயல்படுவதற்கு எங்களுக்கெல்லாம் ஊக்கம் அளித்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## குடமுழுக்கு

***15196—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொத்தட்டை ஊராட்சியில் உள்ள அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற கூத்தாண்டவர் திருக்கோயிலில், 18.20 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 45 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. வருகின்ற மே அல்லது ஜூன் மாதத்திற்குள் மீதமிருக்கின்ற பணிகளும் முடிவுற்று, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற குடமுழுக்கிற்கு இணையாக, திராவிட மாடல் ஆட்சியில், இந்த ஆட்சி